முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அகத்தியர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.02.2019, புதன்கிழமை

1. **ஆறுமுகக் கடவுளின் சக்தியான**
**அரங்கமகா ஞானியே தேசிகனே**
**மாறுதலை கலிகாலத்தில் செய்ய**
**மாதவசியாக வந்த குருவரங்கனே**
2. அரங்கனே உன் நோக்கம் வெற்றி
அகிலமதில் தடையற அடைந்திட
வரங்களென நித்ய பிரசன்ன ஆசி
வழங்க வந்தேன் தலைமைமுனி அகத்தியன் யானும்
3. யானும் **விளம்பி கலை திங்களில்**
**உயர்வான மூவேழீர் திகதி புந்திவாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 23ம் நாள் 06.02.2019, புதன்கிழமை)**
ஞானயுகம் அமைக்கும் முயற்சி
ஞானதேசிகன் மூலம் நடந்தேற அருளுவேன்
4. அருளவே அறம் மிகச் செய்திட
அதன் வழி மனுதர்மம் வளர்த்து
அருளியே மனிதர்களை நோக்கி
அழியாமை வரம் தரும் ஞானி
5. ஞானியரின் சொல் செயல்கள்
நன்மைகளாக பரவி வருக
இனியும் வேடமிட்ட செயல்கள்
ஏமாற்றும் தீயவர்கள் சதிகள்
6. சதிகள் எல்லாம் முடிவு காணும்
சன்மார்க்கம் வழி நெறியாக
விதி மாற்றங்களும் உருவாகி
வேலவன் வெளிப்பாடு ஆளுமை
7. ஆளுமை அரங்கன் உள் தயவு
ஆசி வரம் பெற்ற மனித குல
வலுவான சக்தி அடியவர்கள் மூலம்
வருமுலகில் ஞான ஆட்சி மலரும்
8. மலரும் உண்மை ஆன்மீக
மாண்புமிக்க தரும ஞான சபைகளே
வளரும் உலகை வழிநடத்தும்
வரமென தலைமை முனி யானும்
9. யானுமே அரங்கனுள் கலந்து
உயர் பலம் கூட்டி சித்தர்கள்
ஞானிகள் கூட்டம் நிரப்பி
ஞான சக்தி இறைசக்தி பெருக்கி
10. பெருக்கி அற்புதம் நிகழ்த்தவே
பிரசன்ன ஆசி அருள்கிறேன்
கருத்தாக எல்லா ஞானிகளும்
கலசமுனி என்னை தொடர்ந்து அருளியே

11. அருளியே அரங்கன் சபை தன்னில்
ஆக்கம் பெரும் ஊக்கம் தந்து
வருவோர்க்கு வரமும் வளமும் தருவோம்
வழங்கிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஞானத்தலைவன் முருகப்பெருமானின் மகா சக்தி வடிவமான அரங்கமகா ஞானியே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான மாற்றங்களை கலிகாலத்தினில் செய்திட உலகமாற்றம் தனை நிகழ்த்தி ஞானயுகமாக ஆக்கிட மகா தவசியாக வந்துதித்த குரு அரங்கமகா தேசிகனே உமது நோக்கம் தடையின்றி வெற்றி அடைந்திட ஞானிகள் நாங்கள் உமக்கு வரங்களாக நித்திய பிரசன்ன ஆசி நூல்தனையே வழங்குகிறோம். **விளம்பி வருடம் தை மாதம் 23ம் நாள் 06.02.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்திய பிரசன்ன ஆசி நூல்தனையே உலக நலம் கருதி உலகினில் ஞானயுகம் அமைக்கும் முயற்சியானது ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலம் அமைந்திட நடந்தேற தலைமைமுனி அகத்தியர் யானும் அருளுகிறேன் என்கிறார் மகான் அகத்தியர் பெருமான்.

உலக மக்கள் நலன் கருதி அளவிலாது அறம்தனை செய்து அதன் மூலமாக உலகினில் மானுட தர்மமாகிய மனுதர்மத்தினை வளர்த்து அருள் செய்து காத்து மனித வர்க்கத்திற்கே அழிவிலாமை வரம்தனை அருள் செய்கின்ற மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சொல் செயல்கள் அனைத்தும் உலகினில் நன்மை தரும் செயல்களாக அருளாக பரவி வர, உலகினில் இனி கடவுளின் பெயராலோ ஆன்மீகம் என்ற பெயராலோ மற்றும் வேறு எந்த விதத்திலும் மக்களை வேடமிட்டு ஏமாற்றும் தீயவர்களின் சதிகள் எல்லாம் இனி முடிவிற்கு வந்து விடும்.

இனி உலகினில் உலகெங்கும் ஒரே நெறி எனும் நிலை உருவாகி சன்மார்க்கமே மனிதகுலத்தின் வழிகாட்டு நெறியாக ஆகி சன்மார்க்கத்தின் மூலம் விதிகளும் மாற்றங்களும் உலகினில் விரைந்து உருவாகி முருகப்பெருமானின் வெளிப்பாடும் முருகப்பெருமானின் ஞானஆட்சியும் உலகினில் தோற்றுவிக்கப்படும்.

முருகப்பெருமானின் வெளிப்பாடும் ஞானஆட்சியும் உத்தம மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவினையும், ஆசியையும் பெற்ற மேன்மக்கள் மூலமாக வலுவான சக்தியை அரங்கன் அருளால் பெற்றிட்ட அடிவர்களான இவர்கள் மூலமாக அரங்கன் தயவால் உலகினில் ஞானஆட்சி மலரும்.

இனி உலகினில் உண்மை ஆன்மீகம் மலரும், மாண்புமிக்க தானதருமத்தினை செய்கின்ற தரும ஞானசபைகளே வளர்ச்சியடையும், மற்றைய மற்றைய சபைகளும் சக்திகளும் மெல்ல மெல்ல வீழ்ச்சியடையும், தருமஞான சபைகளே இனி உலகை வழிநடத்தும்.

தலைமை முனி அகத்தியர் பெருமான் யானும் அரங்கனுள் கலந்து உயர்வான ஞானபலமும் அருள்பலமும் யோகபலமும் கூட்டி சித்தர்கள் ஞானிகள் கூட்டத்தினை எமது தலைமையில் அரங்கனுக்காக உலகெங்கும் நிரப்பி உலகமெலாம் ஞானசக்தி பெருக்கி இறைசக்தி பெருக்கி அற்புதங்களை நிகழ்த்திடவே பிரசன்ன ஆசிதனை அருள்கின்றேன்.

தலைமை முனி அகத்தியர் எம்மை பின்தொடர்ந்து எல்லா ஞானிகளும் பிரசன்ன ஆசிதனை அருளி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானசபைதனிலே ஆக்கமும் ஊக்கமும் தந்து வருவோர்க்கு வரங்களையும் வளத்தையும் அருளி நிற்போமப்பா என தமது ஆசி நூல் மூலம் அருளுகிறார் மகான் அகத்தியர் பெருமான்.

–சுபம்–